ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2332/15 - 2023 මැයි මස 17 වැනි බදාදා - 2023.05.17

*2332/15 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*பணிப்புரை இல. 91*

*ச.வ.பி. 4/2011*

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

*10(1)(ஆ)(ii) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை*

*2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தவிசாளர், சாந்த நிரியெல்ல ஆகிய நான், நுகர்வோர் பாதுகாப்பிற்காக எவையேனும் பண்டங்களைச் சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தலில் ஈடுபடுகின்ற ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது தள இயக்குநர், இதற்கான அட்டவணையின் நிரல் 1 இல் குறித்துரைக்கப்பட்ட மூன்று கட்டங்களிலும் அவ்வட்டவணையின் நிரல் 2 இன் பதிவுக்கு நேரொத்ததாகவுள்ள குறித்துரைக்கப்பட்டவாறாக இதற்கான தொடர்புபட்ட ஏதேனும் செயற்பட்டினை நிறைவேற்றுவதற்கு அவ்வட்டவணையின் நிரல் 3 இன் பதிவுக்கு நேரொத்ததாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டுமென இத்தால் பணிப்புரை விடுக்கின்றேன்.*

தவிசாளர்,
பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை.

கொழும்பு,
*2023, மே 17.*

1A - PG 6324 — 81 (2023/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

விசேட பணிப்புரையின் நோக்கத்துக்காக:-

“இ-வர்த்தகம்” என்பது, இணையத்தினூடாக அல்லது வேறு தகவல் வலையமைப்பினூடாக பண்டங்கள், சேவைகள் அல்லது எண்ணிம உள்ளடக்கங்களை விற்பனை செய்யும் வியாபார செயற்பாடு எனப் பொருள்படும்;

“இ-வர்த்தக உருவகம்” என்பது, நிகழ்நிலை விற்பனையாளர்கள் மற்றும் தளங்களின்மேல் இயக்குகின்ற விற்பனையாளர்கள் எனப் பொருள்படும்;

“நிகழ்நிலை விற்பனையாளர்” என்பது, விற்பனையாளரொருவர் தனக்கு சொந்தமான வலைதளத்தினூடாக அல்லது அத்தகைய விற்பனையாளரினால் சொந்தமாக வைத்திருக்கக்கூடிய அல்லது கட்டுப்படுத்தக்கூடிய வேறு தகவல் வலையமைப்புக்களினூடாக கொண்டு நடாத்தக்கூடிய ஏதேனும் இ-வர்த்தகம் எனப் பொருள்படும்;

“தளம்” என்பது, எண்ணிம அல்லது இலத்திரனியல் வலையமைப்பின்மேல் பண்டங்களை, சேவைகளை அல்லது எண்ணிம உள்ளடக்கத்தினை கொள்வனவு செய்தவற்கு தளங்களின் மேல் இயக்குகின்ற விற்பனையாளர்களுடன் தொடர்பு கொள்வதற்கு பாவனையாளர்களை அனுமதிப்பதன் மூலம் அத்தகைய எண்ணிம அல்லது இலத்திரனியல் வலையமைப்பினூடாக இ- வர்த்தகத்தினை நடாத்துவதற்கு தளங்களின் மேல் இயக்குகின்ற விற்பனையாளர்களுக்கு இயலுமானதாக்குகின்ற எண்ணிம அல்லது இலத்திரனியல் வலையமைப்பொன்று எனப் பொருள்படும்;

“தள இயக்குநர்” என்பது, தளமொன்றினை சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது இயக்குகின்ற மூன்றாந் திறத்தவரொருவர் எனப் பொருள்படும்;

“தளங்களின் மேல் இயக்குகின்ற விற்பனையாளர்கள்” என்பது, பாவனையாளர்களுக்கு பண்டங்களை விற்பனை செய்கின்ற அல்லது முனைகின்ற இ-வர்த்தக விற்பனையாளரொருவர் எனப் பொருள்படும்.

**அட்டவணை**

| *கொடுக்கல் வாங்கலின் கட்டங்கள்* | *செயற்பாடு* | *நிபந்தனைகள்* |
|---|---|---|
| முற்கொள்வனவு கட்டம் | (1) நியாயமான வியாபாரம், விளம்பரஞ் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நடைமுறைகள் | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது தள இயக்குநர் -<br>(அ) எவையேனும் பண்டங்களை விளம்பரஞ் செய்யும் போது, ஏமாற்றும் தன்மையான, பிழைவழியுய்த்தலான அல்லது போட்டியற்ற தன்மையான ஏதேனும் நடைமுறையில் ஏதேனும் பிரதிநிதித்துவமோ அல்லது நீக்கமோ அல்லது ஈடுபாடோ செய்தலாகாது;<br>(ஆ) விற்பனையின் நீட்சி அல்லது முனைவு உட்பட, பண்டங்களுக்கான ஏதேனும் விசேட முனைவு அல்லது இலவச முன்னோட்டம், தெளிவான மற்றும் நேரடி பொருள் கொண்டுள்ள முறையில் அத்தகைய முனைவு அல்லது இலவச முன்னோட்டத்திற்கான தகுதியின் தேவைப்பாடுகள் மற்றும் அத்தகைய முனைவு அல்லது முன்னோட்டத்தில் விபரிக்கப்படாத எவையேனும் மேலதிக விதிப்பனவுகள் தொடர்பாக பாவனையாளருக்கு அறிவித்தல் வேண்டும்;<br>(இ) முக்கிய நிபந்தனைகள் குறித்துரைக்கப்பட்டுள்ள உரையில் இலகுவாக வேறுபடுகின்ற, வாசிக்கப்படுகின்ற மற்றும் கிரகிக்கின்றதான ஏதேனும் முனைவு அல்லது விற்பனை தொடர்பான அத்தகைய நிபந்தனைகளை உறுதிப்படுத்துதல் வேண்டும்;<br>(ஈ) அத்தகைய பண்டங்களுக்கான தளத்தின் மீது வெளிக்காட்டப்பட்ட விலை யானது, ஒரு பண்டத்தின் உண்மையான கொள்வனவு விலையாகவுள்ளது என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்;<br>(உ) விளம்பரங்களில் போலியான அல்லது பிழைவழியுய்த்தலான விலை குறித்தல் கோரல்களை எதிர்க்கின்ற பொறுப்புத்துறப்புக்களை பயன்படுத்துதலாகாது; அத்துடன் |

| *கொடுக்கல் வாங்கலின் கட்டங்கள்* | *செயற்பாடு* | *நிபந்தனைகள்* |
|---|---|---|
| | | (ஊ) ஏதேனும் வரத்தக செயற்பாட்டை கொண்டு செல்வதில் ஏற்புடையற்பாலதான விடத்து, 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றியொழுகுதல் வேண்டும். |
| | (2) கோரப்படாத மின்னஞ்சல்கள், குறுஞ்செய்தி சேவைகள் முதலியன | ஏதேனும் இ- வர்த்தக உருவகம் அல்லது எவரேனும் தள இயக்குநர் கோரப்படாத வர்த்தக மின்னஞ்சல் தகவல்கள், குறுஞ்செய்தி சேவைகள் முதலியனவற்றைப் பெறக்கூடிய அல்லது பெறவியலாத தேர்வினைத் தெரிவு செய்வதற்கு பாவனையாளர்களை அனுமதிப்பதற்கான வினைத்திறனான மற்றும் இலகுவாக பயன்படுத்தக்கூடிய நடவடிக்கைமுறைகளை விருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் வேண்டும். |
| | (3) பாவனையாளர் பரிசீலனைகள் | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது எவரேனும் தள இயக்குநர் - |
| | | (அ) பாவனையாளர்களின் பரிசீலனைகளை சேகரிப்பதற்காகவும் வெளியிடுவதற்காகவும் நியாயமானதும் மற்றும் வெளிப்படையானதுமான தரமதிப்பீடு மற்றும் பரிசீலனைப் பொறிமுறையினைக் கொண்டிருத்தல் வேண்டும்; |
| | | (ஆ) பாவனையாளர்களின் தரமதிப்பீடு மற்றும் பரிசீலனை மீதான போலியான தரமதிப்பீடுகள் மற்றும் போலியான பரிசீலனைகளை வெளியிடுதலாகாது; |
| | | (இ) தரமதிப்பீடு மற்றும் பரிசீலனை பொறிமுறையின் மீது தரமதிப்பீடுகள் மற்றும் பரிசீலனைகளை வெளிக்காட்டுவதற்கு மூன்றாந் திறத்தவர்களை வாடகைக்கு அமர்த்துதலாகாது; |
| | | (ஈ) பாவனையாளர்களினால் வெளிக்காட்டுவித்த தரமதிப்பீடுகள் மற்றும் பரிசீலனைகளுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள எவையேனும் ஊக்குவிப்புக்கள் தெளிவான மற்றும் துலாம்பரமான முறையொன்றில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன் |
| | | (உ) பாவனையாளர்களின் நேர்மறையான அல்லது எதிர்மறையான தன்மையைப் பொருட்படுத்தாது அவர்களால் வெளிக்கப்பட்டப்பட்ட எல்லா தர மதிப்பீடுகள் மற்றும் பரிசீலனைகள் சமமாக பரிகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் எதிர்மறையான பரிசீலனைகள் மற்றும் தரமதிப்பீடுகளை ஊக்கப்படுத்துவதற்கு முயற்சித்தலாகாது. |
| | (4) தகவல்களின் வெளிப்படையான தன்மை | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது எவரேனும் தள இயக்குனர் - |
| | | (அ) பிழைவழியுய்யாத முறையில் பண்டங்களை அல்லது தரமதிப்பீடு உள்ளிட்ட வணிக செயற்பாடு தொடர்பான எல்லாத் தகவல்களையும் வெளியிடுதல் வேண்டும்; |
| | | (ஆ) அத்தகைய இ-வர்த்தக உருவகம் அல்லது தள இயக்குநருடன் தொடர்பு கொள்வதற்கு பாவனையாளர்களுக்கு முறையான மற்றும் அணுக்கத்தக்க தொடர்பாடல் பொறிமுறையொன்றினை தாபித்தல் வேண்டும்; |
| | (5) தரவு கேகரித்தல் | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது தளமொன்றின் இயக்குநர் - |
| | | (அ) பாவனையாளர்களின் தனிப்பட்ட தரவுகளை பெறுகின்றபோது, அவர்களுக்கு அந்தரங்கத்தன்மையான கூற்றொன்றினை அனுப்புதல் வேண்டும்; |
| | | (ஆ) பாவனையாளர்கள், சுய விபரக்கோவையில் உள்ளீடு செய்யப்பட்டுள்ள தங்களுடைய தனிப்பட்ட தரவுகளை இற்றைப்படுத்தும் பொருட்டு பரிசீலனை செய்வதற்கும் மாற்றம் செய்வதற்கும் இயலச் செய்கின்ற அத்தகைய தரவுகளை அணுக்கம் செய்வதற்கு அவர்களுக்கான நடவடிக்கை முறைகளைத் தாபித்தல் வேண்டும்; |

| *கொடுக்கல் வாங்கலின் கட்டங்கள்* | *செயற்பாடு* | *நிபந்தனைகள்* |
|---|---|---|
| கொள்வனவு கட்டம் | (1) கட்டளையை உறுதி செய்தல் | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது தளமொன்றின் இயக்குநர்- ஏதேனும் கட்டளையை உறுதி செய்வதற்கு முன்னராக கட்டளை பற்றிய சாராம்சத்தை பரிசீலனை செய்வதற்கான சந்தர்ப்பமொன்றினை பாவனை யாளர்களுக்கு வழங்குதல் வேண்டும். |
| | (2) கொடுக்கல் வாங்கலின் வெளிப்படையான தன்மை | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது தளமொன்றின் இயக்குநர் -<br>(அ) கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பாவனையாளரின் முடிபினை பாதிக்கக் கூடியவாறான சாத்தியம் உள்ளனவான ஏதேனும் அத்தகைய கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளை தவறாக பிறழ்கூற்றுச் செய்தலாகாது அல்லது மறைத்தலாகாது;<br>(ஆ) தவறாக வழிநடாத்துகின்ற ஒப்பந்த நியதிகளை பயன்படுத்துதலாகா தென்பதுடன், கொடுக்கல் வாங்கலின் இயைபான நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் தெளிவான மற்றும் முழுக் கூற்றை பாவனையாளர் களுக்குக்கு வழங்குதலும் வேண்டும்;<br>(இ) பாவனையாளர்களை கொடுக்கல் வாங்கல் தொடர்பில் அறிவிக்கப்பட்ட முடிபொன்றினை ஆக்குவதற்கு இயலச் செய்வதற்கு போதியளவான கொடுக்கல் வாங்கலொன்றுடன் இணைந்த நியதிகள், நிபந்தனைகள் மற்றும் ஆகுசெலவுகள் தொடர்பில் தகவல்களை வழங்குதல் வேண்டும்;<br>(ஈ) முழுமையான கொடுக்கல் வாங்கலுக்கு பாவனையாளர்கள் பயன்படுத்து கின்ற உபாயங்கள் அல்லது தளத்துடனான படிவத்துடன் ஒத்திசைந்துள்ள முழுமையான, சரியான மற்றும் நீடிக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் பற்றிய பதிவொன்றை வைத்திருப்பதற்கு பாவனையாளர்களை இயலச் செய்தல் வேண்டும்;<br>(உ) ஏற்புடையற்பாலதானவிடத்தும் மற்றும் தோதானவிடத்தும், கொடுக்கல் வாங்கலுக்காக வழங்கும் பற்றுச்சீட்டொன்று பின்வருவனவற்றை உள்ள டக்குதல் வேண்டும்-<br>(i) முறையான இ-வர்த்தக உருவகத்தினால் அல்லது தள இயக்குநரினால் சேகரிக்கப்படும் அல்லது விதிக்கப்படும் எல்லா நிர்ணயிக்கப்பட்ட விதிப்பனவுகள் உட்பட விலை;<br>(ii) பாவனையாளரினால் கொடுக்கல் வாங்கல் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர், இ-வர்த்தக உருவகம் அல்லது தள இயக்குநரினால் சேகரிக்கப்படும் அல்லது விதிக்கப்படும் ஏதேனும் கட்டாயமான (நிலையான அல்லது மாறுபடத்தக்க) அல்லது விருப்பத்தெரிவிலான விதிப்பனவுகள் தொடர்பாக தகவல்கள்;<br>(iii) பாவனையாளருக்கு எவரேனும் மூன்றாந் திறத்தவரினால் சேகரிக்கப் படுகின்ற அல்லது விதிக்கப்படுகின்ற (மீண்டுவரும் விதிப்பனவுகள்) வழமையாக ஏற்புடையற்பாலதான ஆகுசெலவுகள் தொடர்பிலான தகவல்கள்;<br>(iv) கொடுப்பனவு முறைமை மற்றும் தன்னியக்கமாக மீளச்செய்யும் கொள் வனவுகள் மற்றும் சந்தாப்பண புதுப்பிப்புக்கள் மற்றும் அத்தகைய தன்னியக்க அல்லது புதுப்பித்தல் ஒழுங்கேற்பாடுகளிலிருந்து விலகுவ தற்கான வழிகள் போன்ற அத்தகையதான மீண்டுவரும் விதிப் பனவுகளின் ஒப்பந்தக்காலம் உள்ளடங்கலான ஏற்புடையற்பாலதான விடத்திலும் மற்றும் ஏற்புடைமையாகும் போதான வேறு நியதிகள் மற்றும் நிபந்தனைகள்; |

| கொடுக்கல் வாங்கலின் கட்டங்கள் | செயற்பாடு | நிபந்தனைகள் |
|---|---|---|
| | | (v) பண்டங்களை ஒப்படைத்தல் தொடர்பிலான நியதிகள்; |
| | | (vi) மீளப்பெறுதல், முடிவுறுத்துதல் அல்லது இரத்து செய்தல், விற்பனையின் பின்னரான சேவை, திருப்புதல், பரிமாற்றம், நிதி மீளளிப்பு, கட்டுறுத்துக்கள் மற்றும் உத்தரவாதம் போன்றவற்றுக்கான ஏற்புடையற்பாலதான நிபற்தனைகள் தொடர்பிலான விபரங்கள்; |
| | | (vii) அந்தரங்கக் கொள்கை; அத்துடன் |
| | | (viii) ஏற்புடையற்பாலதான பிணக்குத் தீர்மானம் மற்றும் கொள்வனவு தொடர்பிலான நிவாரணம் மீதான விருப்பத்தெரிவுகள் பற்றி தகவல்கள். |
| | (3) கொடுப்பனவு நியதிகள் | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது தளமொன்றின் இயக்குநர் இலகுவாக பயன்படுத்தக்கூடிய கொடுப்பனவு பொறிமுறைகளை பாவனையாளர்களுக்கு வழங்குதல் வேண்டுமென்பதுடன் மற்றும் அதிகாரமளிக்கப்படாத அணுக்கம் அல்லது தனிப்பட்ட தரவுகளின் பயன்பாடு, மோசடி மற்றும் அடையாள திருட்டு போன்றன உட்பட, கொடுப்பனவுகளுடன் தொடர்புபட்ட ஆபத்துகளுடன் ஆரம்பமாகுகின்றவற்றுக்கான பாதுகாப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதலும் வேண்டும். |
| | (4) ஒப்படைப்பு மற்றும் ஏற்பாட்டியல் | ஏதேனும் இ- வர்த்தக உருவகம் அல்லது தளமொன்றின் இயக்குநர் - |
| | | (அ) பாவனையாளர்கள் கொடுக்கல் வாங்கலொன்றினை உறுதிப்படுத்துவதற்கு கேட்பதற்கு முன்னராக, பண்டங்களை ஒப்படைத்தல் மற்றும் விலை குறித்தல் பற்றிய தகவல்கள் தொடர்பான சேவைகள் பற்றிய தகவல்களின் சாராம்சத்தினை பரிசீலனை செய்வதற்கு பாவனையாளர்களுக்கு சந்தர்ப்பமொன்றை வழங்குதல் வேண்டும்; |
| | | (ஆ) பாவனையாளருக்கு பண்டங்களை ஒப்படைக்கும் போது, விடயத்துக்கேற்ப, அத்தகைய நோக்கத்துக்காக நம்பகத்தன்மையான ஏற்பாட்டினால் வழங்குநர்களைப் பயன்படுத்தி ஒப்படைப்பானது ஏற்பாட்டியலாளர் இ- வர்த்தக உருவகங்களால் அல்லது தள இயக்குநரினால் செய்யப்படுதல் வேண்டும்; |
| | | (இ) ஏதேனும் நியாயமற்ற தாமதமின்றி பண்டங்களை ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| | (5) பிற்போடும் கால காலங்கள் மற்றும் கட்டளைகளை இரத்து செய்வதற்கான உரிமை | ஏதேனும் இ- வர்த்தக உருவகம் அல்லது தளமொன்றின் இயக்குநர் தோதான மற்றும் நடைமுறைச் சாத்தியமுள்ளவிடத்து, உறுதிப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்றிலிருந்து மீளப்பெறுவதற்கு பாவனையாளர்களுக்கு சந்தர்ப்பமொன்றினை முனைதல் வேண்டும். |
| | (6) அந்தரங்கத் தன்மை மற்றும் தரவுப் பாதுகாப்பு | ஏதேனும் இ-வர்த்தக உருவகம் அல்லது தளமொன்றின் இயக்குநர் - |
| | | (அ) பாவனையாளர்களின் தனிப்பட்ட தரவுகளைச் சேகரித்தல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பில் ஏமாற்றுத்தன்மையான செயல்முறைகளில் ஈடுபடுதலாகாது; |
| | | (ஆ) பாவனையாளரின் தரவுச் சேகரித்தல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பில் அத்தகைய இ-வர்த்தக உருவகம் அல்லது தள இயக்குநரின் செயல் முறைகள் சட்டத்திற்குட்டப்பட்டது, வெளிப்படையானது மற்றும் நியாயமானது என்பதனை உறுதிப்படுத்துவதன் மூலம் பாவனையாளர் அந்தரங்கத் தன்மையினைப் பாதுகாத்தல் வேண்டுமென்பதுடன் பாவனையாளர் பங்குபற்றுகை மற்றும் தெரிவை இயலச் செய்தலும் வேண்டும். அத்துடன் நியாயமான பாதுகாப்பு வழிமுறைகளை வழங்குதலும் வேண்டும்; |

| *கொடுக்கல் வாங்கலின் கட்டங்கள்* | *செயற்பாடு* | *நிபந்தனைகள்* |
|---|---|---|
| | | (இ) தெளிவான, முக்கியமாக காட்சிப்படுத்தப்படக்கூடிய அந்தரங்கத் தன்மை யான கொள்கைகளை ஏற்றல் வேண்டும். |
| பிற்கொள்வனவு கட்டம் | (1) கட்டுறுத்து | ஏதேனும் இ- வர்த்தக உருவகம் அல்லது தள இயக்குநர்- |
| | | (அ) வணிகத்தன்மைக்கான கட்டுறுத்து மற்றும் குறித்த நோக்கமொன்றுக்காகத் தகுதியான கட்டுறுத்து உள்ளடங்கியதான “செலவிடப்பட்ட பணத்துக்கான நியாமான பெறுமதி” என்னும் நெறிகளின் மீதான அடிப்படையில் உட்கிடையான கட்டுறுத்துக்களுக்கமைய, எவரேனும் பாவனையாளருக்கு பண்டங்களை விற்பனை செய்யலாம்; |
| | | (ஆ) “அவ்வாறாகவே” ஒரு பொருள் விற்பனை செய்யப்பட்டிருக்குமிடத்து, விற்பனை செய்யப்பட்ட விடயம் அபாயகரமான மற்றும் எவரேனும் ஆளுக்கு தனிப்பட்ட ஊறினை ஏற்படுத்தியிருப்பின் அதற்கு இன்னும் பொறுப்புடையவராக இருக்கலாம். |
| | (2) பொருட் பாதுகாப்பு | ஏதேனும் இ- வர்த்தக உருவகம் அல்லது தளமொன்றின் இயக்குநர்- |
| | | (அ) பொருட் பாதுகாப்புத் தேவைப்பாடுகள் பற்றிய போதுமான விழிப்புணர் வினைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பாதுகாப்புத் தேவைப்பாடுகள் பாவனையாளருக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்ப தனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்; |
| | | (ஆ) விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் சாத்தியமுள்ள பாதுகாப்பு பிரச்சினை களினை தீர்த்தலில் பாவனையாளருக்கு உதவுதல் வேண்டும்; |
| | | (இ) விற்பனை செய்யப்பட்ட பண்டங்கள் தொடர்பில் பாவனையாளர் பின்னூட்டல் பொறிமுறையினை வடிவமைத்தல் வேண்டும். |

EOG 05-0127

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.